# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - முடியானே
## கரணங்களும் தாமும் பெருவிடாய்ப்பட்டுப் பேசுதல்

** முடியானே! * மூவுலகும் தொழுது ஏத்தும் சீர்
அடியானே! * ஆழ் கடலைக் கடைந்தாய்! * புள் ஊர்
கொடியானே! ** கொண்டல் வண்ணா! * அண்டத்து உம்பரில்
நெடியானே! * என்று கிடக்கும் என் நெஞ்சமே 1

நெஞ்சமே! நீள் நகராக * இருந்த என்
தஞ்சனே! * தண்ணிலங்கைக்கு * இறையைச் செற்ற
நஞ்சனே! ** ஞாலம் கொள்வான் * குறள் ஆகிய
வஞ்சனே! * என்னும் எப்போதும் என் வாசகமே 2

வாசகமே ஏத்த அருள் செய்யும் * வானவர் தம்
நாயகனே! * நாள் இளம் திங்களைக் * கோள் விடுத்து **
வேய் அகம் பால் வெண்ணெய் தொடு உண்ட * ஆன் ஆயர்
தாயவனே! * என்று தடவும் என் கைகளே 3

கைகளால் ஆரத் * தொழுது தொழுது உன்னை *
வைகலும் மாத்திரைப் போதும் * ஓர் வீடின்றி **
பை கொள் பாம்பேறி * உறை பரனே! * உன்னை
மெய் கொள்ளக் காண * விரும்பும் என் கண்களே 4

கண்களால் காண * வருங்கொல்? என்று ஆசையால் *
மண் கொண்ட வாமனன் * ஏற மகிழ்ந்து செல் **
பண் கொண்ட புள்ளின் * சிறகொலி பாவித்து *
திண் கொள்ள ஓர்க்கும் * கிடந்து என் செவிகளே 5

செவிகளால் ஆர * நின் கீர்த்திக் கனி என்னும்
கவிகளே * காலப் பண் தேன் * உறைப்பத் துற்று **
புவியின் மேல் * பொன் நெடும் சக்கரத்து உன்னையே *
அவிவின்றி * ஆதரிக்கும் எனது ஆவியே 6

ஆவியே! ஆரமுதே! * என்னை ஆள் உடை *
தூவி அம்புள் உடையாய்! * சுடர் நேமியாய்! **
பாவியேன் நெஞ்சம் * புலம்பப் பல காலும் *
கூவியும் காணப் பெறேன் * உன கோலமே 7

கோலமே! தாமரைக் கண்ணதோர் * அஞ்சன
நீலமே! * நின்று எனது ஆவியை * ஈர்கின்ற
சீலமே! ** சென்று செல்லாதன * முன் நிலாம்
காலமே! * உன்னை எந்நாள் * கண்டு கொள்வனே? 8

கொள்வன் நான் மாவலி! * மூவடி தா என்ற
கள்வனே! * கஞ்சனை வஞ்சித்து * வாணனை
உள் வன்மை தீர ** ஓர் ஆயிரம் தோள் துணித்த *
புள் வல்லாய்! * உன்னை எஞ்ஞான்று பொருந்துவனே? 9

பொருந்திய மா மருதின் இடை போய * எம்
பெருந்தகாய்! * உன் கழல் காணிய பேதுற்று **
வருந்தி நான் * வாசக மாலை கொண்டு * உன்னையே
இருந்து இருந்து * எத்தனை காலம் புலம்புவனே? 10

** புலம்பு சீர்ப் * பூமி அளந்த பெருமானை *
நலங்கொள் சீர் * நன்குருகூர்ச் சடகோபன் ** சொல்
வலம் கொண்ட ஆயிரத்துள் * இவையும் ஓர் பத்து *
இலங்கு வான் * யாவரும் ஏறுவர் சொன்னாலே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---